# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2221 - 2021 මාර්තු මස 26 වැනි සිකුරාදා - 2021.03.26**

*2221 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |

| | பக்கம் |
|---|---|
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 96 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 98 |


***கவனிக்க.*-** (i) *செத்சத யோகா நிகேதனய கார்ய பாரய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தம்) சட்டமூலம் 2021, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2021, ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


95 - B 082216 - 353 (2021/03)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மேல் மாகாண சபையின் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் புத்திகா ருவனி சமரதுங்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1994.06.12 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள களு/ ப்ர/ 2812 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான ஜாவத்தவத்த, களுத்துறை எனும் முகவரியில் வசிக்கும் ரணவகே ஆரச்சிகே செனீ நோனா என்பவருக்கு கையளிக்கப்பட்டு பாணந்துறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டி. ஓ. 7/ 348 ஆம் இலக்கத்தின் கீழ் 1987.09.10 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2021.05.07 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

களுத்துறை நிருவாக மாவட்டத்தின் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 718ஏ, ஜாவத்தை பற்றில் கோரளையில் உள்ள இலக்கம் 718ஏ, ஜாவத்த கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஜாவத்தவத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் களுத்துறை நில அளவை அத்தியட்சகர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு மு. பி. க. 542 ஆம் இலக்கத் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 3 ஆம் இலக்க காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் 33 பேர்ச் அளவு விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு, தல்லஸ்கெலே-

வடக்கு : மு. பி. க. 542 காணித்துண்டு இலக்கம் 16 (பாதை), 2 ;
கிழக்கு : மு. பி. க. 542 காணித்துண்டு இலக்கம் 16 (பாதை) ;
தெற்கு : மு. பி. க. 542 காணித்துண்டு இலக்கம் 4 ;
மேற்கு : ஹி. பி. 48478.

புத்திகா ருவனி சமரதுங்க,
பிரதேச செயலாளர்,
களுத்துறை.

பிரதேச செயலகம்,
களுத்துறை,
2018, யூலை 26.

03-744/ 1

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மேல் மாகாண சபையின் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள களுத்துறை பிரதேச செயலாளர் சிசிர குமார ஹேனாதீர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1984.12.26 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள களு/ ப்ர/ 6993 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான கிதுலாவ, களுத்துறை தெற்கு முகவரியில் வசிக்கும் பத்திநிதுகே லினகாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு களுத்துறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டி. ஓ. 7/ 262 ஆம் இலக்கத்தின் கீழ் 1987.03.06 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என

*அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2021.05.07 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*களுத்துறை நிருவாக மாவட்டத்தின் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவின் களுத்துறை தொடமுனை வடக்கு, இலக்கம் 723, கிதுலாவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பலாதோட்டை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் களுத்துறை நில அளவை அத்தியட்சகர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு மு. பி. க. 475 ஆம் இலக்கத் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 76 ஆம் இலக்க காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் 0ஏ. 1றூ. 34பே. அளவு விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு-*

*வடக்கு : மு. பி. க. 475 காணித்துண்டு இலக்கங்கள் 8 (பாதை), 73 (பாதை) ;*
*கிழக்கு : மு. பி. க. 475 காணித்துண்டு இலக்கங்கள் 73 (பாதை) மற்றும் 75 ;*
*தெற்கு : மு. பி. க. 475 காணித்துண்டு இலக்கம் 75 மற்றும் 85 ;*
*மேற்கு : மு. பி. க. 475 காணித்துண்டு இலக்கம் 85 மற்றும் 8 (பாதை).*

*சிசிரகுமார ஹேனாதீர,*
*பிரதேச செயலாளர்,*
*களுத்துறை.*

*பிரதேச செயலகம்,*
*களுத்துறை,*
*2021, சனவரி 18.*

*03-744/ 2*

---

*இணைப்பு 9*

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*மேல் மாகாண சபையின் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள களுத்துறை பிரதேச செயலாளர் சிசிர குமார ஹேனாதீர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995.03.10 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள களு/ ப்ர/ களு 751 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான அரியகம, தெல்துவ, வாத்துவ முகவரியில் வசிக்கும் நுவர பொகுணகே நந்தசேன என்பவருக்கு கையளிக்கப்பட்டு களுத்துறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டி. ஓ. 23/ 51 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.05.10 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2021.05.07 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*களுத்துறை நிருவாக மாவட்டத்தின் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவின் களுத்துறை தொடமுனை வடக்கு, இலக்கம் 709டீ, அரியகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தெல்துவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் களுத்துறை நில அளவை அத்தியட்சகர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு மு. பி. க. 2842 ஆம் இலக்கத் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 39 ஆம் இலக்க காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.0362 ஹெக்டயார் அளவு விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு-*

*வடக்கு : மு. பி. க. 2842 காணித்துண்டு இலக்கங்கள் 38, 37 ;*
*கிழக்கு : மு. பி. க. 2842 காணித்துண்டு இலக்கங்கள் 37, 40 ;*
*தெற்கு : மு. பி. க. 2842 காணித்துண்டு இலக்கம் 40 மற்றும் 42 ;*
*மேற்கு : மு. பி. க. 2842 காணித்துண்டு இலக்கம் 42, 43 மற்றும் 38.*

*சிசிரகுமார ஹேனாதீர,*
*பிரதேச செயலாளர்,*
*களுத்துறை.*

*பிரதேச செயலகம்,*
*களுத்துறை,*
*2021, சனவரி 15.*

*03-744/ 3*

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/43052.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : PLC/LC/L4/Nika/L/2-29.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குருநாகல் மாவட்டம், நிக்கவரெட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 293, நிக்கவரெட்டிய வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நிக்கவரெட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் FVP 1991 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 715 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.0272 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள அரச காணியை சமிதியின் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு மட்டுப்படுத்தப்பட்ட பால் உற்பத்தியாளர் ஆரம்ப கூட்டுறவுச் சங்கம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 714;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 714 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 714 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 716.

02. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2020.07.15 தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சரினால் அனுமதியளிக்கப்பட்ட 2020 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 1/2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

**தவணைப் பணம்**.- இல்லை ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி பால் உற்பத்தியாளர் ஆரம்ப கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) 2020.07.15 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவுசெய்கின்ற கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படும் ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

03. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. கே. என். நயோமி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, மாச்சு 26.

03-579

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/57553.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : PLC/LG/Galga/L.08.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குருநாகல் மாவட்டம், கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 733, பாளுகடவல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பாளுகடவல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 420017 ஆம் இலக்க எல்லை வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 95 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.1826 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள அரச காணியை சமிதி நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு சமகி மரணாதார சமிதியின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 99, 92 மற்றும் 94 ;

கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 94 ;

தெற்கு : காணித்துண்டு இலக்கம் 82 ;

மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 96 மற்றும் 99.

02. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- ஐந்து (05) வருடங்கள் (2020.07.15 தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சரினால் அனுமதியளிக்கப்பட்ட 2020 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 1/2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

**தவணைப் பணம்**.- இல்லை ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி சமிதியின் கட்டடம் அமைக்கும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற் காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

03. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யு. கே. என். நயோமி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2021, மாச்சு 26.

03-580